## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 29.11.2023 ந் தேதி நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21335/2021/எம்2 நாள்.14.11.2023 இல் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய மக்களுடன் முதல்வர் என்னும் திட்டத்தினை மேற்படி சுற்றறிக்கையில் அறிவுறுத்தியபடி செயல்படுத்திட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வருவாய் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம். ஊரக வளர்ச்சித்துறை, உள்துறை, பள்ளிக்கல்வித்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட துறைகளுடன் இணைந்து நகராட்சி நிர்வாகம் முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களின் கோரிக்கைகளை பெறப்பட வேண்டும்.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட உரிய ஏற்பாடுகளையும், வார்டு வாரியாக நடத்தப்படும் முகாம்களுக்கு உரிய பணியாளர்களை நியமித்து பிறதுறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சிறப்புடன் நடத்தப்பட வேண்டும் எனவும், இம்முகாம் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள், பொது சுகாதாரம், ஆண் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக கழிப்பறை வசதி, மருத்துவ வசதி மற்றும் உரிய இணைய சேவைகள் இருப்பதை உறுதி செய்து முகாம் நடைபெறும் இடங்களில் இணைய சேவை துரிதமாக வழங்கும் சேவைப்பிரிவை தேர்வு செய்ய வேண்டும். மேலும், இம்முகாம் நடைபெறும் மையங்களில் முதியோர் , கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உரிய சிறப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மேலும், பொதுமக்கள் அறியும் வண்ணம் போதிய விளம்பரங்களை செய்தி பிரசுரங்கள், மின்னணு மற்றும் சமூக வளைதங்கள் மூலமாக முகாம் நடைபெறும் நாள் நேரம், மற்றும் நடத்தப்படும் இடம் ஆகியவற்றை முகாம் நடைபெறுவதற்கு முன்பாக தெரிவித்து பெரும்பாலான மக்கள் பங்கேற்கும் வகையில் சிறப்புடன் நடத்திட வேண்டும். அனைத்து முகாம்களும் ஒரே பகுதியில் நடத்தப்படாமல் பரவலாக அனைத்து மக்களும் அணுகும் வகையில் முகாம் நடைபெறும் இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

மேற்படி முகாம்கள் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் துவங்கி அம்மாத நான்காவது வாரத்திற்குள் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மனுக்கள் பெறப்பட வேண்டும் என்றும் பெறப்பட்ட இம்மனுக்களுக்கு ஜனவரி மாதத்திற்குள் உரிய நடவடிக்கைகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நகராட்சி நிர்வாகம் தொடர்பாக பெறப்படும் மனுக்கள் நகராட்சி அலுவலகங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளை போன்றே முகாம் நடைபெறும் இடங்களிலும் உரிய ஆவணங்களை கணினியி ல் பதிவேற்றம் செய்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பெறுதல் போன்ற வசதிகளை ஏற்படுத்தி ஒப்புகை சீட்டு வழங்கப்பட வேண்டும். கட்டிட அனுமதி தொடர்பான விண்ணபங்களுக்கு பதிவு எண் வழங்கி பின்னர், பதிவு பெற்ற பொறியாளர்கள் (Licensed Building Surveyor) உதவியுடன் ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும், ஏற்கனவே விண்ணப்பித்த மனுதாரர்களுக்கு மீண்டும் விண்ணப்பிக்க அறிவுறுத்தாமல் ஏற்கனவே பெறப்பட்ட மனுவின் மீது தீர்வு காணப்பட வேண்டும்.

மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்புடைய பின்வரும் 8 சேவைகளுக்கான மனுக்களை பெற்று உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணப்பட வேண்டும்.

1. சொத்து வரி விதிப்பு,
2. சொத்து வரி பெயர் மாற்றம்
3. குடிநீர் இணைப்பு
4. தொழில் உரிமம் (D & O License)
5. பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் வழங்குதல், திருத்தங்கள்
6. கட்டிட அனுமதி
7. திடக்கழிவு மேலாண்மை
8. தெருவோர வியாபாரிகள் நலத்திட்டம் (PM SVANidhi)

மேற்காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படியும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் அறிவுரையின் படியும் இந்நகராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் கோரிக்கைகளை பெற கீழ்காணும் விபரப்படி முகாம்கள் நடைபெற உள்ளது.

| வ. எண் | முகாம் நடைபெறும் நாள் | முகாம் நடைபெறும் வார்டுகளின் விபரம் | முகாம் நடைபெறும் இடம் | முகாம் நடைபெறும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 06.12.2023 | 1,7,8,9,10,11 மற்றும் 12 | கைக்கோளர் கலையரங்கம் காந்தி நகர், கோபிசெட்டிபாளையம் | காலை 10.00 முதல் மாலை 3.00 வரை |
| 2 | 08.12.2023 | 2,3,4,5,6 மற்றும் 14 | கௌதம் மஹால் அப்துல்கலாம் நகர், கோபிசெட்டிபாளையம் | |
| 3 | 13.12.2023 | 15,16,17,18,19 மற்றும் 20 | சூர்யா மஹால் நாய்க்கன்காடு ஈரோடு மெயின் ரோடு கோபிசெட்டிபாளையம் | |
| 4 | 15.12.2023 | 13,21,22,23, 26, மற்றும் 27 | K.M.S.திருமண மண்டபம் மொடச்சூர் ரோடு கோபிசெட்டிபாளையம் | |
| 5 | 20.12.2023 | 24.25.28,29 மற்றும் 30 | M.R.S.மினி ஹால் வாரச்சந்தை அருகில் மொடச்சூர், கோபிசெட்டிபாளையம் | |

மேற்படி முகாம்கள் நடத்துவதற்கு விளம்பரம் செய்யும் வகையில் கைப்பிரதி , பிளக்ஸ் பேனர், ஆட்டோ விளம்பரம் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும், கணினிகள் வைப்பதற்கான டேபிள், சேர், மற்றும் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கான டேபிள், சேர் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவும், பொதுமக்களின் கோரிக்கை விண்ணப்பங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய Fiber net இணைப்பு மற்றும் WiFi மோடத்துடன் BSNL/Airtel/Jio இல் இணைப்பு பெறவும், தடையின்றி மின்சாரம் பெற ஜென்செட் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவும், மற்றும் இம்முகாமில் கலந்து கொள்ளும் அலுவலர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழுங்கவும், முகாம் நடைபெறும் இடங்களுக்கான மின் கட்டணம் ஆகிய செலவினங்களை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும். மேலும் இச்செலவினங்களை உள்ளூர் நிறுவனங்கிடம் விலைப்புள்ளிகள் பெற்று அதன் அடிப்படையில் செலவினங்களை மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.708**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி